Register No. | | | | | | | | |

**TA4A** **6867–25**

(For the candidates admitted from 2017 – 2018 to 2022-2023)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LAW OF EVIDENCE

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the provisions relating to exclusion of oral evidence by documentary evidence.

   ஆவணச் சாட்சியத்தால் வாய்மொழி சாட்சியம் விலக்கப்படுகின்ற பிரிவுகளைப் பற்றி விவாதி.

2. Explain presumptions in rape and dowry death cases.

   வன்புணர்வு மற்றும் வரதட்சணை மரணம் வழக்குகளில் அனுமானங்கள் பற்றி விளக்குக.

3. What are the various kinds of examinations under the Evidence Act?

   சாட்சியச் சட்டத்தில் உள்ள பலவகையான விசாரணைகளை விவரிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What facts need not be proved under the Indian Evidence Act?

   சாட்சியச் சட்டத்தின்படி நீதிமன்றத்தில் மெய்ப்பிக்க தேவை இல்லாத நிகழ்மைகள் யாவை?

5. Discuss about the validity of confessions made to a police officer.

   காவல் துறை அலுவலரிடம் அளிக்கப்படும் குற்ற ஏற்புரையின் செல்லுந்தன்மையை விவாதிக்கவும்.

6. Distinguish between "Public Documents" and "Private Documents".

'பொது ஆவணங்கள்' மற்றும் 'தனியார் ஆவணங்கள்' வேறுபடுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Accomplice.

உடன் குற்றவாளி. (கூட்டுக் குற்றவாளி)

(b) Best Evidence Rule.

சிறந்த சாட்சியம் விதி.

(c) Disproved.

பொய்ப்பிக்கப்பட்டது.

(d) Hostile Witness.

பிறழ் சாட்சி

(e) Judgment in personam.

நபர்சுட்டிய தீர்ப்புரை.

(f) Patent ambiguity.

வெளிப்படை பொருள் மயக்கம்.

(g) Shall Presume.

அனுமானிக்க வேண்டும்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' staggered from a room in which she had been with Y, with her throat cut, exclaiming "See what Y has done to me". Whether the statement is admissible as Res gestae.

'X' என்பவர் தான் 'Y'-யுடன் இருந்த அறையைவிட்டு கழுத்து அறுபட்ட நிலையில் தள்ளாடி வெளியே வந்து "'Y' என்னை என்ன செய்தார் பாருங்கள்" என்று கூச்சலிட்டார். X-ன் இந்தக் கூற்று ஒன்றிய செயலாக ஏற்புடையதா.

9. 'A' is charged with shooting at 'B' with intent to kill him. Whether A's intent may be proved by fact of 'A' having previously shot at B?

'A' என்பவர் 'B'-யைக் கொலை செய்யும் எண்ணத்தோடு சுட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார். 'A' ஏற்கனவே 'B' யை சுட்டுள்ளார் என்ற பொருண்மையை வைத்து 'A' -யின் குற்ற மனதை நிரூபிக்க இயலுமா?

10. 'A', a lunatic, before dying said that 'B' stabbed him. Is A's dying declaration admissible?

'அ' என்ற பித்தர் தான் இறக்கும் போது 'ஆ' என்பவர் தன்னை குத்தியதாகக் கூறினார். 'அ'வின் மரண வாக்குமூலம் ஏற்புடையதா?

---

Register No. | | | | | | | | |

**TA4B**

6868–25

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the scope and development of administrative law and distinguish it from constitutional law.

   நிர்வாகச் சட்டத்தின் நோக்கெல்லை மற்றும் வளர்ச்சியை விளக்கி, அது எவ்வாறு அரசமைப்புச் சட்டத்தில் இருந்து வேறுபடுகிறது என்பதை விவரிக்கவும்.

2. Elucidate the circumstances where natural justice need not be followed by the authorities while deciding disputes.

   வழக்குகளுக்குத் தீர்வு காணும் போது எந்தெந்தச் சூழ்நிலைகளில் நிர்வாக அதிகாரிகள் இயற்கை நீதிக் கோட்பாட்டை பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்பதை விவரிக்கவும்.

3. 'The law relating to the tortious liability of the government for the acts of its own servants has been developed in India in its own way' - Discuss.

   "தனது ஊழியர்கள் செய்த செயலுக்கு, அரசின் தீங்கியல் கடப்பாடு குறித்த சட்டம் இந்தியாவில் தானாகவே வளர்ந்தது." - விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Abuse of administrative discretion is effectively controlled by the judiciary" - Explain.

   "நிர்வாக விருப்புரிமையைத் தவறாக பயன்படுத்துவதை, நீதிமன்றம் முறையாகக் கட்டுப்படுத்துகின்றது" - விளக்கவும்.

5. State the development of Administrative Tribunals in accordance with the Constitution of India.

இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நிர்வாகத் தீர்ப்பாயங்கள் வளர்ச்சியுற்றுள்ளதனை எடுத்துரைக்க.

6. Describe the privileges of government in legal proceedings.

சட்ட நடவடிக்கைகளில் அரசுக்குள்ள சிறப்புரிமைகளைப் பற்றி விவரிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Franks Committee.

பிராங்ஸ் குழு

(b) Droit Administratif.

ட்ராய்ட் அட்மினிஸ்டிரேடிப்

(c) Parent Act.

தோற்றுவாய்ச் சட்டம்

(d) Speaking Order.

பேசும் ஆணை

(e) Res judicata.

முன் தீர்ப்புத் தடை

(f) Writ of Habeas Corpus.

ஆட்கொணர்வு நீதிப்பேராணை

(g) Public Corporation.

பொது ஆணையம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Tax Assessment Order was passed by the Sales Tax officer against 'X'. The Order was challenged by 'X' before the High Court of Delhi by way of writ petition. The writ petition was dismissed on merits. He files another writ petition with some additional grounds – will he succeed?

'X' என்பவருக்கு எதிராக வரி விதித்து விற்பனை வரி அதிகாரி உத்தரவு பிறப்பிக்கிறார். 'X' என்பவர் அவ்வுத்தரவை எதிர்த்து டெல்லி உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். நீதிப்பேராணை மனுவானது டெல்லி உயர்நீதிமன்றத்தால் தகுதிப்பாடு செய்து தள்ளுபடி செய்யப்படுகிறது. அவர் மீண்டும் சில கூடுதல் விவரங்களுடன் மற்றொரு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். அவர் வெல்வாரா?

9. A regulation was framed by the Bank of Bombay providing for termination of service of the woman receptionist on her first pregnancy. Decide the validity of the regulation.

பெண் வரவேற்பாளரின் முதல் கருவுற்றலில் பணி நீக்கம் செய்யப்படுவார் என்ற நெறிமுறையை பாங்க் ஆப் பாம்பே வகுக்கின்றது. அந்த நெறிமுறையின் ஏற்புத் தன்மையை தீர்மானிக்கவும்.

10. State Government appointed a Committee to select books and purchase them for the libraries of schools and colleges. Some of the committee members selected books written by the same committee members. Those authors whose books were not selected challenged this decision. Decide.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் நூலகங்களுக்கு புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாங்குவதற்காக ஒரு குழுவை மாநில அரசு நியமித்தது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் சிலர் அவர்கள் எழுதிய புத்தகங்களையே தேர்ந்தெடுத்தனர். தங்கள் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படாத புத்தக ஆசிரியர்கள் குழுவின் முடிவை எதிர்க்கின்றனர். - தீர்மானிக்கவும்.

---

Register No. | | | | | | | | |

**TA4C**

**6869–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW – I

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define closure and discuss as to how far the workers are protected during closure of the Industrial undertaking under the Industrial Disputes Act, 1947.

   தொழிலை மூடிவிடுதல் என்பதை வரையறு. 1947-ம் ஆண்டு தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தொழிலை மூடிவிடும் தருவாயில் எவ்வாறு தொழிலாளர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதை விளக்குக.

2. Explain how the Payment of Wages Act, 1936 protects the workers from exploitation.

   ஊதியம் வழங்கல் சட்டம், 1936 எவ்வாறு தொழிலாளர்களை சுரண்டலில் இருந்து பாதுகாக்கிறது எனபதனை விவரிக்கவும்.

3. Discuss the powers and functions of the registered trade union under the Trade Union Act, 1926.

   தொழிற்சங்க சட்டம் 1926ன் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the essentials of collective bargaining.

   கூட்டுப்பேரத்தின் அவசியத்தினை பற்றி விளக்குக.

5. Explain the procedure for getting certification of standing order under the Industrial Employment (Standing Orders) Act, 1946.

நிலையாணைகள் சட்டம் 1946ன் கீழ் நிலையாணைகளை சான்றளித்தலுக்கான நடைமுறைகளைக் குறிப்பிடுக.

6. Explain the theories of wages.

ஊதிய கோட்பாடுகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Industry

தொழில்

(b) Fixation of wage period

ஊதிய காலத்தினை நிர்ணயம் செய்தல்

(c) Advisory Boards

ஆலோசனை குழுக்கள்

(d) Recognition of Trade Union

தொழிற்சங்கத்திற்கு அங்கீகாரம் அளித்தல்

(e) Badli Workmen

பதிலி வேலையாள்

(f) Define Standing Orders

நிலையாணையின் வரையறை

(g) International Labour Organisation

சர்வதேச தொழிலாளர் அமைப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. In a factory where 250 workmen are working, only 20 workers raise a dispute regarding wages and bonus. Decide whether the dispute raised by them will come within the purview of Industrial Dispute under the Industrial Disputes Act. Give reasons.

250 பேர் வேலை செய்கின்ற தொழிற்சாலையில், வெறும் 20 பேர் மட்டும் ஊதியம் மற்றும் மீதூதியம் சம்பந்தமாக கேட்டு தொழிற்தகராறினை எழுப்புகின்றனர். அது தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் தொழிற்தகராறு என்ற வரையறைக்குள் வருமா என்று முடிவு செய்க. காரணங்கள் கொடுக்கவும்.

9. The draft standing orders submitted by the Industrial establishment was certified by the certifying authority on 12.04.2024. No appeal was filed. On 10.09.2024, the workers filed an application for amendment of the certified standing orders. Decide the appeal.

ஒரு தொழிலக நிறுவனம் சமர்பித்த வரைவு நிலையாணைகளை, சான்றளிக்கும் அதிகாரி 12.04.2024 அன்று சான்றளிக்கிறார். இதை எதிர்த்து எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படவில்லை. தொழிலாளர்கள் 10.09.2024-ல் சான்றிட்ட நிலையாணைகளை திருத்தம் செய்ய மனு செய்கின்றனர். மேல் முறையீட்டினை தீர்மானிக்க.

10. Selvam is employed in a chocolate factory and is paid Rs. 6,000/- (six thousand) per month as wages. A sum of Rs. 1,700/- is deducted towards house accommodation, Rs. 2,000/- is deducted towards loan borrowed from housing co-operative society, Rs. 100/- is deducted towards trade union membership and Rs. 1,000/- is deducted as per order of court. Decide the validity of the deductions.

செல்வம் என்பவர் ஒரு சாக்லெட் ஆக்கத் தொழிலகத்தில் மாதம் ரூ. 6,000/- (ஆறு ஆயிரம்) ஊதியமாகப் பெறுகின்றார். வீட்டு வசதிக்காக ரூ. 1,700/-ம், வீட்டு கூட்டுறவுச் சங்க கடனுக்காக ரூ. 2,000/-ம், தொழிற்சங்க உறுப்பினர் தொகைக்காக ரூ. 100/-ம் மற்றும் நீதிமன்றம் பணவழக்கில் பிறப்பித்த ஆணை அடிப்படையில் ரூ. 1,000ம் பிடித்தம் செய்யப்படுகிறது. பணப்பிடித்தத்தின் செல்லுத்தன்மை பற்றி முடிவு செய்க.

---

Register No. | | | | | | | | |

**TA4D** **6870–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Custom is the older and original source of International Law in particular as well as the law in general". Comment and explain customs as a source of International Law.

"சர்வதேச சட்டத்திற்கு குறிப்பிட்டும் பொதுவாகவும் "வழக்காறு" மிகப்பழமையானதும் மற்றும் முதன்மையான மூலமாக இருக்கிறது". இக்கூற்றை விமர்சித்து சர்வதேச சட்டத்திற்கு வழக்காறு ஒரு மூலமாகும் என்பதை விளக்குக.

2. Discuss the consequences of state succession with respect to international treaties.

நாடுகளின் இறக்குரிமையினால் சர்வதேச உடன்படிக்கைகளில் ஏற்படும் விளைவுகளை விவாதிக்கவும்.

3. Explain the nature of the jurisdiction of the International Court of Justice (ICJ) and the manner in which decisions are enforced.

சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை விளக்கி அதன் தீர்ப்புகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rules relating to Interpretation of Treaties.

சர்வதேச உடன்படிக்கை குறித்த சட்டப்பொருள் விதிகள் குறித்து விளக்குக.

5. Examine the role of the United Nations Security Council in maintaining the international peace and security.

சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிர்வகிப்பதில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அவையின் பங்களிப்பை ஆராய்க.

6. Enumerate the rights of Diplomatic Agents in the Vienna Convention on the Diplomatic Relations, 1961.

1961-ம் வருடத்திய வியன்னா மாநாட்டின் இராஜதந்திர உறவுகள் குறித்த விதிகளில் இராஜதந்திர முகவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பட்டியலிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Prof. J.G. Starke's definition on 'International Law'.

பேரா. J.G. ஸ்டார்க்கின் 'சர்வதேச சட்டம்' குறித்த வரையறை.

(b) International Law Commission.

சர்வதேச சட்டக் குழு.

(c) Dualistic Theory.

இருசார் கொள்கை.

(d) De facto and De jure Recognition.

நிகழ்வுநிலை மற்றும் சட்டநிலை அங்கீகாரம்.

(e) Absolute liability theory.

முழு பொறுப்புக் கொள்கை.

(f) Asylum.

புகலிடம்.

(g) ECOSOC.

சமூக மற்றும் பொருளாதார கவுன்சில்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A state C's exploration ship discovered oil below the depth of 1500 metres in the sea bed of Indian Ocean at a distance of 190 nautical miles from the Indian Coast. India claims that she has exclusive rights to exploit and use the oil. Is India's claim justified?

இந்திய கடற்கரை எல்லையிலிருந்து 190 நாடிகல் மையிலுக்கு அப்பால் ஒரு "இ" நாட்டு ஆய்வுக் கப்பல் இந்தியப் பெருங்கடலில் கடல் அடிப்பகுதியில் 1500 மீட்டருக்கு கீழ் எண்ணெய் இருப்பதை கண்டறிகின்றது. இந்திய அரசு தனக்கு மட்டுமே எண்ணெயை எடுப்பதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உரிமையுண்டு என உரிமை கோரியது. இந்தியாவின் உரிமைக் கோரிக்கை நியாயமானதா?

9. The Indian Parliament passed a law prohibiting fishing in an area of the Indian Maritime belt. A Pakistan trawler was captured while fishing in this area and were put on trial. The captain of the trawler pleaded that the international law permitted it. Decide.

இந்திய பாராளுமன்றம் தனது கடற்பரப்பில் மீன் பிடிப்பதை தடைசெய்யும் விதமாக சட்டத்தை இயற்றியது. பாகிஸ்தான் நாட்டு இழுவைப்படகில் இந்திய கடற்பரப்பில் மீன் பிடித்தவர்களைப் பிடித்து நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தியது. அப்போது அவ்விழுவைப் படகின் தலைவன் நீதிமன்றத்தில் இந்திய கடற்பரப்பில் மீன்பிடிப்பதை சர்வதேச சட்டம் அனுமதியளிக்கிறது என வாதிட்டார். தீர்மானிக்க.

10. State 'A' has successfully extradited a fugitive criminal from state "Y" for the charge of murder. But state 'A' tried him not for murder but for causing grievous hurt to a man named James. Now the fugitive raises objection that he cannot be tried for other offence. Decide.

'Y' நாட்டிலிருந்த தப்பி ஓடிய குற்றவாளியை 'A' நாடானது கொலை புரிந்தமைக்காக வெற்றிகரமாக மீட்டது. ஆனால் 'A' நாடு கொலைக் குற்றத்திற்காக நீதிமன்ற விசாரணை செய்யாமல் ஜேம்ஸ் என்பவருக்கு கொடுங்காயம் விளைவித்ததற்காக விசாரணை செய்தது. இதை தப்பியோடிய குற்றவாளி இந்த விசாரணையை, மீட்டுக்கொண்டு வந்த குற்றத்தை தவிர வேறு குற்றத்திற்கு விசாரணை செய்யக்கூடாது என ஆட்சேபணை செய்கிறார். தீர்மானிக்க.

---

Register No. | | | | | | | | |

**TA4F**

**6871–25**

(For the candidates admitted from 2023-2024 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2025.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

BHARATIYA SAKSHYA ADHINIYAM (BSA) – 2023.

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'Motive'. To what extent is the 'preparation' and 'conduct' of a party to a proceedings is relevant under the Bharatiya Sakshya Adhiniyam?

   'நோக்கம்' என்பதை வரையறுக்கவும். பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் படி எந்த அளவிற்கு ஒரு வழக்கு நடவடிக்கையில் தரப்பினரின் 'தயாராகுதல்' மற்றும் 'நடத்தை' தொடர்புடையதாகும்?

2. "The contents of a document must be proved by the document itself" – Examine the validity of this statement in the light of the provisions in Bharatiya Sakshya Adhiniyam.

   "ஒரு ஆவணத்தின் உள்ளடக்கங்களை அந்த ஆவணத்தின் மூலமே மெய்ப்பிக்க வேண்டும்" – இக்கருத்தின் செல்லுந்தன்மையை பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் பிரிவுகளின் ஒளியில் ஆராய்க.

3. What are Privileged Communications? State the circumstances under which the privilege can be claimed by a witness under the Bharatiya Sakshya Adhiniyam.

   காப்புடைச் செய்திகள் யாவை? எந்தச் சூழ்நிலைகளில் காப்புடைமையை ஒரு சாட்சி பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் கோர முடியும் என்பதை எடுத்துக் கூறுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the law of conspiracy as laid down in Bharatiya Sakshya Adhiniyam.

பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள சதி பற்றிய விதிகளை விவாதிக்க.

5. Distinguish between judgement in rem and judgement in personam.

மன்று சுட்டிய தீர்ப்பு மற்றும் நபர் சுட்டிய தீர்ப்பு – வேறுபடுத்துக.

6. Explain the various kinds of examination of witness under the Bharatiya Sakshya Adhiniyam.

பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் பல்வேறு சாட்சி விசாரணைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Shall presume

அனுமானித்தல் வேண்டும்

(b) Public document

பொது ஆவணம்

(c) Ancient document

தொல்லாவணம்

(d) Child witness

குழந்தை சாட்சியம்

(e) R. v. Pulukuri Kottaya

அரசு எதிர் புலுகுரி கோட்டையா

(f) Alibi

வேற்றிட வாதம்

(g) Hearsay evidence

கேள்விநிலை சான்று

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is accused of defaming 'B' by publishing an imputation intended to harm the reputation of 'B'. Whether the facts of previous publication by 'A' about 'B', showing ill will on the part of 'A' towards 'B' is relevant.

'B' என்பவரைப் பற்றி அவதூறு செய்தி வெளியிட்டு 'A' அவருடைய பெயருக்கு களங்கம் விளைவிக்க முயன்றதாக 'A' குற்றம் சாட்டப்படுகிறார். 'B'யைப் பற்றி 'A' செய்தி வெளியிட்டதாக உள்ள பொருண்மையானது, 'B'-யிற்கு எதிராக 'A'-விற்கு உள்ள தீய எண்ணத்தை காட்டுவதற்கு தொடர்புடைய சங்கதியாகுமா?

9. 'A', who is accused of murder alleges that, by reason of unsoundness of mind, he did not know the nature of the act. On whom the burden of proof lies?

கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 'A' என்பவர் பித்து நிலையில் அந்தச் செய்கையின் தன்மையை தாம் அறிந்திருக்கவில்லை என்று சொல்கிறார். மெய்ப்பிக்கும் சுமை யாரிடம் உள்ளது?

10. 'A' agrees in writing to pay 'B' Rs. 1,00,000/- on 1st of May 2024. Can the fact that at the same time, an oral agreement was made that the money should not be paid till the 31st May 2024, be proved?

'B' என்பவரிடம் ரூ. 1,00,000/- ஐ மே 1, 2024 அன்று செலுத்துவதாக 'A' என்பவர் எழுத்து மூலம் உறுதியளிக்கிறார். அதே நேரம் அந்தத் தொகையினை மே 31, 2024 வரை செலுத்த தேவையில்லை என்று வாய்மொழியாக ஒப்பந்தம் செய்ததை நிரூபிக்க இயலுமா?

---